DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெள்ளிகிழமை 25ம் நாள் சாட்சியாகிய ஸ்ரீராம் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீராம் | வயது | 36 |
| த/பெ. | மனோகரன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.9/2023**

(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் 25.04.2025 எ.சா.1**

1. எனக்கும், மனுதாரருக்கும் நடந்த திருமணம் 2வது திருமணம் என்றால் சரிதான். எனது முதல் திருமணத்தின் விவாகரத்து உத்தரவு நகலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் திருமணம் என்ன காரணத்திற்காக விவாகரத்து நடந்தது என்றால் கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து நடந்தது. என்னுடைய முதல் மனைவி எனது தாய்மாமனின் மகள் என்றால் சரிதான்.

2. மனுதாரர் எனக்கு எதிராக அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருடன் தாம்பத்திய உறவை தவிர்த்தாக விவாகரத்து வழக்கில் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது பொய். நான் மனுதாரர் பெண் பார்க்க வந்தபோது பெங்களூரில் உள்ள SAP நிறுவனத்தில் வேலை செய்வதாக தெரிவித்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சம்பள பட்டியல் மனுதாரரிடம் நான் கொடுத்தது என்றால் சரிதான். ஜீலை 2020 மாதத்திற்கான எதிர்மனுதாரர் சம்பள பட்டியல் நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மாத மற்ற சம்பளம் எவ்வளவு என்றால் ரூபாய் 106586. பிடித்தங்கள் போக ரூபாய் 1022610. கொரோனா காலத்தில் அதிகபடியாக வேலை செய்ததால் கூடுதலாக சம்பளம் வழங்கப்பட்டது. நான் தற்போதைய சம்பள பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. ரூபாய் 160000 சம்பளம் பெறுவதால்தான் எனது சம்பள பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சம்பள பட்டியலை தாக்கல் செய்ய தயாராக

உள்ளேனா என்றால் எனக்கு விருப்பம் இல்லை. 2020ம் வருடம் மார்ச் மாதம் தொடங்கி ஜீலை மாதம் ஊரடங்கு முடிந்தது என்றால் இல்லை. ஆகஸ்ட் மாதம் பள்ளிகள் திறக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது திருமணத்தின்போது ஊரடங்கு இல்லை என்றால் சரியல்ல.

4. 40 பேர்தான் திருமணத்தில் கலந்துகொண்டதாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தில் 250 பேர் கலந்து கொண்டார்கள் என்றாலும் மனுதாரர் தரப்பில் ரூபாய் 5 லட்சம் செலவு செய்யப்பட்டது என்றால் அது தவறு. மனுதாரரின் முதல் திருமணம் சமரசமாக விவாகரத்து செய்துகொண்டார்கள் என்றால் இல்லை. அந்த உத்தரவை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இந்த வழக்கில் மனுதாரரின் முதல் திருமண விவாகரத்து உத்தரவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. எனது தந்தை சென்னை மாநகராட்சியில் வேலை செய்து பணி ஓய்வு பெற்று ஓய்வு ஊதியம் பெற்று வருகிறார் என்றால் சரிதான். ரூபாய் 15000 ஓய்வு ஊதியம் பெற்று வருகிறார். எனது தந்தைக்கு வருமானம் உள்ளதால் அவரை நான் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு அரக்கோணத்தில் சொந்தமாக வீடு உள்ளது என்றால் இல்லை. எனது அம்மா பெயரில் உள்ளது.

6. அரக்கோணத்தில் மனைகள் உள்ளது என்றால் இல்லை. எனது தாத்தா காளிவாரி கண்டிகையில் 4 பிளாட்டுகளை என் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. பெரிய பாளையத்தில் 2 மனைகள் உள்ளது என்றால் இல்லை. என் பெயரில் கார் உள்ளது என்றால் சரிதான். அதன் மதிப்பு 12 லட்சம் என்றால் இல்லை 6 லட்சம். மனுதாரர் தோல்வியாதிக்கு சிகிச்சை எடுத்தற்கு ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.